

செங்கல்பட்டு மாவட்டம், சித்தாமூர் வட்டம், சோத்துப்பாக்கம் ஊராட்சியில் ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில்,மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா,இ.ஆ.ப., செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் மு.பாபு, உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (23.7.2025) சென்னை. தமிழ்நாடு மருத்துவ கவுன்சில் விருதுகள்–2025 நிகழ்ச்சியில் மருத்துவத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களுக்கு விருதுகள் வழங்கி விழாப்பேருரையாற்றினார். இந்நிகழ்வில் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மரு.எழிலன் நாகநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார். தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. அருண்தம்புராஜ், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக துணை வேந்தர் மரு.நாராயணசாமி, தமிழ்நாடு மருத்துவ கவுன்சில் நிர்வாகிகள் மரு.முருகநாதன், மரு.பிரபாகரன், மரு.சிவராம் கண்ணன் மற்றும் விருது பெற்ற மருத்துவப் பேராசிரியர்கள் உடனிருந்தனர்.

### சென்னை – பல்கலைக் கழகத்தில்

# ஜூலை மாத ‘சொல் புதிது’ கூட்டம்!

## முனைவர் ம.இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜூலை 24 -

ஜூலை மாத சொல்புதிது கூட்டம் நேற்று (23-7-2025) சென்னைப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் தமிழ் வளர்ச்சிக் கழகக் கருத்தரங்கக் கூடத்தில் அதன் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்தாய்வுக் கூட்டத்தில் பேராசிரியர்கள் வ.ஜெயதேவன், மு.இராமசாமி, நல்லூர் சரவணன், பாரதிபாலன், அர்த்தநாரீசுவரன், திரை எழுத்தாளர் ராஜ் கண்ணன், பத்திரிகையாளர் முருகேஷ், பதிப்பாளர் வீரபாகு ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் Altcoin இணைய மாற்றுக்காசு Bitcoin இணையக்காசு Blockbuster வணிக வெற்றி Bouncer மெய்க்காவலர் Call sheet படவேளை Collegium நெறியாயம் Cryptocurrency இணைய மறைநாணயம் Ethereum ஈத்தர் குறிக்காசு Gate keeper வாயில் காவலர் Guaranty பொறுப்புறுதி Loco pilot தொடரியோட்டி / இரயில் ஓட்டி Litecoin இணைய மென்காசு Multilevel parking | அடுக்கு நிறுத்தகம் Orange economy ஆக்கநிலைப் பொருளாதாரம் Poclain பறிவண்டி Poster விளம்புகை Postpaid பின்பணம் / பின்செலுத்துகை Premiere show சிறப்புக் காட்சி Prepaid முன்பணம் / முன்செலுத்துகை Preview show முன்னோக்குக் காட்சி Promo song விளம்புகைப் பாடல் Recharge மறுவூட்டம் Restart மறுதொடக்கம் Road show வீதியுலா Rope car வடவூர்தி Saree drapist சேலை அணியாளர் Smart City திறன் வளநகர்/சீர்நகர் Smart meter திறன்மானி Smart parking சீர் நிறுத்தகம் Smart TV திறன் தொலைக்காட்சி Smart watch திறன் கடிகாரம் Sneak peek தூண்டு காட்சி Special show சிறப்புக் காட்சி Surgical strike இலக்கழி தாக்குதல் Warranty காப்புறுதி ஆகிய சொற்கள் பரிந்துரைக்கப்பட்டது.

### வள்ளியூரில்

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ மாணவ, மாணவிகளிடம் விழிப்புணர்வு துண்டு பிரசுரம்!

## மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு வழங்கினார்!

நெல்லை, ஜூலை 24 -

நெல்லை கிழக்கு மாவட்டம் வள்ளியூர் மரியா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி முன்பு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு ஏற்பாட்டில் ஓரணியில் தமிழ் நாடு விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் துண்டு பிரசுரம் 1000 த்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்களிடம் வினியோகம் செய்யப்பட்டது.

திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி,நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், நகராட்சி நிர்வாக துறை அமைச்சர்,கழக முதன்மை செயலாளருமான கே.என்.நேரு, நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அதன்படி கல்லூரி தோறும் கழக மாணவர் அணியின் விழிப்புணர்வு பிரச்சாரம் நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி சார்பில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு ஏற்பாட்டில் இராதாபுரம் தொகுதி வள்ளியூர் திருச்செந்தூர் சாலையில் உள்ள மரியா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி முன்பு விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் துண்டு பிரசுரம் வினியோகம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வு நெல்லை கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு தலைமையில் மாவட்ட துணைச் செயலாளர் நம்பி,மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர்,இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், வள்ளியூர் பேரூர் செயலாளர் சேதுராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் 1000க்கும் மேற்பட்ட மாணவியர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பிரச்சாரத்தை மேற்கொண்டு துண்டு பிரசுரம் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டது.அதில் இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு மட்டும்தான் கல்விக்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கிறது.போன்ற பல்வேறு கருத்துக்கள் அதில் இடம்பெற்றிருந்தன. அதனை மாணவிகள் படித்துக் கொண்டே கல்லூரிக்குள் சென்றனர்.

அதனைத் தொடர்ந்து இராதாபுரம் தொகுதியில் உள்ள தெட்ஷணமநாடார் கல்லூரி,நேரு நரசிங் கல்லூரி,ஹை டெக் பாலிடெக்னிக் உட்பட பல்வேறு கல்லூரிகளில் மாணவர், மாணவியர் களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்து வகையில் ஓரணியில் தமிழ்நாடு துண்டு பிரசுரம் விநியோகம் கழக நிர்வாகி களால் விநியோகம் செய்யப்பட்டது.

நிகழ்வில் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் மாடசாமி,துணை அமைப்பாளர்கள் அயப்பன்,ஆதி பாண்டியன்,இராதாபுரம் தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கார்த்தி சுபாஷ், தகவல் தொழில் நுட்ப அணி விஜயன்,சுதாகர்,பேரூர் அவைத் தலைவர் அன்பரசு,ஒன்றிய கவுன்சிலர் ஜோசிஜின், மார்க்கெட் ராஜா,பேரூர் கவுன்சிலர்கள் மாடசாமி,ஆப்ரகாம், மாணிக்கம் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

நெல்லை கிழக்கு மாவட்டம் இராதாபுரம் தொகுதியில் உள்ள கல்லூரிகளில்

மாணவர்,மாணவியர்களிடையே ஓரணியில் தமிழ்நாடு விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் துண்டு பிரசுரம் மிகப்பெரிய வரவேற்பை பெற்றுள்ளது. குறிப்பிடத்தக்கதாகும்.

### உதகை, திருப்பத்தூர், திருவாரூர், கள்ளக்குறிச்சி மற்றும்

# நாமக்கல் மாவட்டங்களில் பணிபுரியும் மகளிர்க்கான தோழி விடுதிகள்!

## டெண்டர் கோரப்பட்டுள்ளது!

சென்னை, ஜூலை 24 -

வேலை செய்யும் பெண்கள் பாதுகாப்பாக தங்குவதற்கு தமிழ்நாடு அரசால் தோழி மகளிர் விடுதி தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முழுவதும் பெரும் வரவேற்பைப் பெற்ற தோழி விடுதியை மேலும் விரிவுபடுத்த புதிதாக காஞ்சிபுரம், ஈரோடு, தருமபுரி, சிவகங்கை, தேனி, கடலூர், நாகை, ராணிப்பேட்டை, கரூர் ஆகிய நகரங்களில் 72 கோடி ரூபாயில், 700 படுக்கை வசதி கொண்ட புதிய தோழி விடுதிகள் அமைக்கப்படும் என மகளிர் தினத்தன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், தோழி விடுதிகள் கட்டும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இதனைத்தொடர்ந்து, உதகை, திருப்பத்தூர், திருவாரூர் மாவட்டம் விளமல் கிராமம், கள்ளக்குறிச்சி மாவட்டம் வீர சோழபுரம் மற்றும் நாமக்கல் உள்ளிட்ட 5 பகுதிகளில் தோழி மகளிர் விடுதி கட்டுவதற்கான டெண்டர் கோரப்பட்டுள்ளது.



சேலம் மாவட்டம், அம்மாப்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட வார்டு 38, 39 பகுதிகளுக்கு செட்டிக்கார மண்டபத்தில் நேற்று முன்தினம் (22.07.2025) நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமில் வழங்கப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நலத்திட்ட உதவிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி ஆணையர் இளங்கோவன், அம்மாப்பேட்டை மண்டல உதவி ஆணையர் வேடியப்பன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள உள்ளனர்.

### தயாளன் தலைமை! மரக்காணம் ஒன்றியம் எண்டியூர் ஊராட்சியில்

# ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திண்டிவனம் ஜூலை 23.

மரக்காணம் ஒன்றியம் எண்டியூர் ஊராட்சியில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார்.

ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும் எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமை தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் கடந்த 15 ஆம் தேதிசிதம்பரத்தில் தொடங்கி வைத்தார். இதை அடுத்து விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் எண்டியூர் ஊராட்சியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டம் முகம் நடைபெற்றது.

மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமை தாங்கினார்.ஒன்றிய துணை சேர்மன் பழனி முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில்முன்னாள் அமைச்சரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான்கலந்து கொண்டு உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமைதொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு கணினியில் பதிவேற்றம் செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார்

அப்போது பொதுமக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் விவரம் குறித்து துறை சார்ந்த அதிகாரிகளிடம் கேட்டறிந்த முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. முகாமில்மக்கள் நல்வாழ்வு துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தையும், ரத்த அழுத்தம், சர்க்கரை, நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்து மாத்திரை அடங்கிய பெட்டகத்தினையும் அவர் வழங்கினார்.

இதைத் தொடர்ந்து முகாமில் கலந்து கொண்ட அரசு அலுவலர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்த முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ அவர்களுக்கு பந்தி பரிமாறிய சம்பவம் அரசு அலுவலர்களிடையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டுஇலவச வீட்டு மனை பட்டா, குடும்ப அட்டை, முதியோர் ஓய்வூதியம் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் பயன் பெறுவதற்கு மனு அளித்தனர்.

நிகழ்ச்சியில் திண்டிவனம் சிப்காட்தனித் துணை ஆட்சியர் விஜயா, மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன்,

ஒன்றிய கவுன்சிலர் திருநாவுக்கரசு, ஊராட்சி மன்ற தலைவர் ராஜாராம், துணைத் தலைவர் ஜனார்த்தனன், மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் திருமலை, ஒன்றிய கிளைக் கழக செயலாளர்கள் அருள் குமரன், ஜெயச்சந்திரன், மேஸ்திரி ஏழுமலை, சிங்கனூர் முருகானந்தம், ஒன்றிய நிர்வாகிகள் ரவிக்குமார், ஆதிகேசவன், மீனாகுமாரி, தேவதாஸ், கிளை நிர்வாகிகள் வேலு, மனோகரன், ஏழுமலை வசந்தம், சுதாகர்உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வட்டார வளர்ச்சி அலுவலர் அருளரசி அனைவருக்கும் நன்றி கூறினார்.

### ஏ.எம்.வி. பிரபாகராஜா – க.தனசேகரன் – கே.கண்ணன் – உமாகாந்த் பங்கேற்பு

# 137 ஆ வட்ட கழக பாக முகவர்கள் உறுப்பினர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் அ.கதிரேசன் அறிவிப்பு

சென்னை, ஜூலை 24 -

137 ஆ வட்ட பாக முகவர்கள் கூட்டம் இன்று நடைபெறுகிறது என வட்டச் செயலாளர் அ.கதிரேசன் அறிவித்துள்ளார். அது வருமாறு: -

சென்னை தெற்கு மாவட்ட செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் ஆலோசனைப்படி லைஞர் நகர் தெற்கு பகுதி 137வது ஆ வட்ட கழக பாக முகவர்கள் BLA2 உறுப்பினர்கள் BDA கூட்டம் கலைஞர் நகர் தெற்கு பகுதி கழக அலுவலகத்தில் இன்று (24.07.2025 - வியாழன்) இரவு 7 மணி அளவில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு வட்டக் கழக அவைத்தலைவர் என். சக்கரவர்த்தி தலைமை தாங்குகிறார். இக்கூட்டத்தில்

விரும்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகராஜா, கணக்கு மற்றும்

தணிக்கை குழு தலைவர் க.தனசேகரன், கலைஞர் நகர் தெற்கு பகுதி கழக செயலாளர் கே.கண்ணன், விருகம்பாக்கம் தொகுதி பொறுப்பாளர் உமாகாந்த் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை தர உள்ளனர்.

இக்கூட்டத்திற்கு பாக தலைவர்கள் பாக றுப்பினர்கள் மாவட்ட பிரதிநிதிகள் மாவட்ட அமைப்பாளர்கள் மாவட்ட துணை அமைப்பாளர் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் அனைவரும் திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். பொருள் : உறுப்பினர்கள் சேர்க்கை கழக ஆக்கப்பணிகள்

இவ்வாறு வட்டச் செயலாளர் அ.கதிரேசன் தெரிவித்துள்ளார்.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியம் காவனூர் புதுச்சேரி கிராமத்தில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் சுந்தர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு முகாமை தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு ஜாதி சான்று இருப்பிடச் சான்று வருமானச் சான்று ஆகியவற்றை உடனுக்குடன் வழங்கினார். உடன் மாவட்ட வழங்கல் அலுவலர் பாலாஜி, ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன், பேரூராட்சித் தலைவர் சசிகுமார், பேரூர் செயலாளர் என்.எஸ். பாரிவள்ளல்,ஊராட்சி மன்ற தலைவர் சாமுண்டீஸ்வரி ராஜா,தாசில்தார் தேன்மொழி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவபானுமதி, சூர்யா, கவுன்சிலர்கள் பானுமதி சேகர், ருத்ர கோட்டி, தயாளன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆதிநாராயணன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் வடக்கு பகுதி 71வது வட்டத்தில் "ஓரணியில் தமிழ்நாடு " கழக உறுப்பினர் சேர்க்கை பணி பகுதி கழக செயலாளர் செ.தமிழ்வேந்தன் தலைமையில் நடைபெற்றது இதில் வட்ட செயலாளர் பரிமளா சுரேஷ், சே. மணிமாறன், ஜெகன், பாக முகவர் BLA2, வளைதள முகவர் BDA மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

